விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 202 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 24 திங்கட்கிழமை (08.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சம்பந்தனின் நோக்கம் நிறைவேற பிரதமர் மோடி உதவி செய்வார்

### இறுதி நிகழ்வில் பங்கேற்ற அண்ணாமலை உரை



(திருகோணமலை)

சம்பந்தனின் நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும் பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலை 15

## முல்லைத்தீவில் அம்மன் கண்திறந்த அதிசயம்





(முள்ளியவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக் 15

## சாவகச்சேரி வைத்தியசாலையில் பரபரப்பு இரவோடு இரவாக

# வைத்தியர் அர்ச்சுனாவை கைது செய்ய பொலிஸார் முனைப்பு!

## திரண்டனர் பொதுமக்கள்; குவிந்தனர் பொலிஸார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை நேற்று இரவோடு இரவாக விசாரணைக்காகப் பொலிஸார் அழைத்துச் செல்ல முற்பட்டதால் வைத்தியசாலை வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)



(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## மோ.சைக்கிள் விபத்து; அருட்தந்தை உயிரிழப்பு

### மன்னாரில் சம்பவம்



(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அருட்தந்தையொருவர் உயிரிழந்துள்ளார். 16



## இருநூறு தொழிற்சங்கங்கள் இன்றும் நாளையும் போராட்டம்

3ஆம் பக்கம் பார்க்க

## சம்பள அதிகரிப்பால் வரிச்சுமை உயரும்

### அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பினை வழங்குவதன் ஊடாக மக்களின் வரிச்சுமை அதிகரித்து செல்வதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரி 15

## தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூட சதித்திட்டம் நடக்கிறது

### ஜனாதிபதிக்கு பாபுசர்மா அவசர கடிதம்

(கொழும்பு)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மகளிர் இல்லத்துக்கு எதிராக ஒரு சிலரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட வேண்டும் எனக்கோரும் அவசர கடிதமொன்றை சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளரும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒருங் 15

## சம்பந்தரின் உடல் நேற்று தீயுடன் சங்கமம்



02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தரின்...

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் பூதவுடல் நேற்று திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக அவரின் உடல் திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை மற்றும் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தியதுடன், தமது இரங்கல்களையும் தெரிவித்தனர். (ந-7)





சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு ஆதரவாக நேற்றிரவு நீதி கோரி திரண்ட பொதுமக்கள்

காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடாத்தும்

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

அழைப்பிதழ்



இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம் : 09.07.2024 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணி

**நிகழ்ச்சிகள்**

**"மூதறிஞர்" "கலாநிதி" "வைத்தீசுவரக் குருக்கள் அரங்கு"**

- **மாணிக்கவாசகர் சுவாமிகள் மண்டபத்திற்கு எழுந்தருளல்**
- **மன்றக் கொடியேற்றல், மன்றக்கீதம்**
- **சொற்பொழிவு - 'செஞ்சொற்செல்வர்' இரா.செல்வவடிவேல் அவர்கள்**
- **தலைப்பு** :- "அழுது அடி அடைந்த அன்பர்"
- **இசைக் கச்சேரி** :- 'நுண்கலைமாணி' சிவலிங்கேஸ்வரன் நிதர்சன் குழுவினர்
- **நாட்டியாஞ்சலி** :- 'சிவார்ப்பணம்' 'நாட்டியசுடர்' 'நுண்கலைமாணி' இராஜேந்திரன் ஹர்ஷாந் குழுவினர்
- **வில்லிசை** :- 'திருநீலகண்டர்' சிறுப்பிட்டி 'கலைஞானமாமணி' சத்தியதாஸ் குழுவினர்
- **பரிசில் சான்றிதழ் வழங்கல்** :- 'முதறிஞர்' 'கலாநிதி' வைத்தீசுவரக்குருக்கள் ஞாபகார்த்தமாக நடைபெற்ற திருவாசக மனனப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் சான்றிதழ் வழங்கல்.

**குறிப்பு:** - நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ்கிளையிலிருந்து பி.ப 4.00 மணிக்கு ஆரம்பமாகும். (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம். யாழ்.வண்ணை சிவன்கோயில் அருகாமை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ் கிளை**

(C-0753)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



### திருமதி லலிதாமலர் முகுந்தன்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் – கல்வி நிர்வாகம் வலயக்கல்வி அலுவலகம் – வலிகாமம்)

எமது கல்லூரியின் முதல்வர்
திருமதி லலிதாமலர் முகுந்தன் அவர்கள்
கல்வி நிர்வாக சேவை அதிகாரியாகப்
பதவியுயர்வு பெற்று 08.07.2024 தொடக்கம் வலிகாம
கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக்கல்விப்
பணிப்பாளராகக் கடமையேற்பதையிட்டு அகமகிழ்ந்து
வாழ்த்துவதோடு அவர் தம் சேவை சீரும்
சிறப்புமாக அமைய வேம்படி விநாயகனின்
பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றுகின்றோம்.

(144)

வாழ்த்துவோர்: சேவையாளர் சங்கம்,
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

## 9 ஆம் ஆண்டு நினைவுகள்



பிறப்பு: 18.07.1949

இறப்பு: 08.07.2015

### அமரர் கதிரவேலு சந்திரலிங்கம்(வெள்ளை)

(ஓய்வுநிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனைதென்னைவள அ.கூ.சங்கம்)

அன்பே உருவான எம் தந்தையை
நாம் இழந்து ஆண்டுகள் ஒன்பதானதே!
நெஞ்சில் எமை வைத்து காத்து
அன்பை அள்ளித்தந்து அரவணைத்த
உங்களை எந்த நிலையிலும்
மறக்க மாட்டோம் அப்பா!

(142)

கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 - 06 - 1970



இறப்பு 06 - 07 - 2024

### செல்வரத்தினம் செல்வராசா

(முன்னாள் கமக்கார அமைப்புத் தலைவர்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பூர்வீகமாகவும் இல.25, 8ம் வாய்க்கால் உருத்திரபுரம் கிளிநொச்சியை பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லா என்றழைக்கப்படும் செல்வரத்தினம் செல்வராசா அவர்கள் 06.07.2024 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சிவயோகம் அவர்களின் பேரனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பாக்கியம் அவர்களின் அன்பு மகனும் இரத்தினசிங்கம் மற்றும் கமலாதேவியின் மருமகனும் ஞானமலர் (தலைவர், கமக்கார அமைப்பு, D-8 உருத்திரபுரம்) அவர்களின் அன்புக் கணவரும் டினோகரன், துவாரகன்(கிளி ம.வி மாணவர்கள்) பிரணவன்( கிளி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராணி மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் மருமகனும் தவமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2024 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உருத்திரபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.25, 8ம் வாய்க்கால்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(c-0756)

தகவல் : குடும்பத்தினர்
077 882 8305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று போராட்டத்தில் குதிக்கும் 200 தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் 200 இற்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க் கிழமை ஆகிய இரு தினங்களில் சுகயீன விடு முறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

அதன்படி கிராம உத்தியோகத்தர்கள், நில அளவையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உட்பட அரச துறையில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அதிகரிக்கவுள்ள முட்டை விலை

(கொழும்பு)
நாட்டில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் முட்டைகளுக்கு 15 வீதமான பெறுமதி சேர் வரி அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.டி.ஆர். அழககோன் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக அடுத்த வருடம் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் நுகர்வோர் அதிகார சபையானது முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்துள்ளது.

இருந்த போதும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்னும் 10 நாட்களில்
## தேர்தலுக்கான திகதி வெளிவரும்
### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**(கொழும்பு)**
**அடுத்த பத்து நாட்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கான திகதியை அறிவிக்கும் அதி காரம் எமக்கு கிடைக்கவுள்ளது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பின் பிரகாரம் செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

அடுத்த பத்து நாட்களில் அதாவது ஜூலை 17ஆம் திகதி முதல் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் ஆணைக் குழுவுக்கு கிடைக்கின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்காக 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான பணிகள் முழுமையடைந்துள்ள அடுத்து வரும் சில நாட்களில் மாவட்ட ரீதியில் அவை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதேநேரம் நாடளாவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களின் குறைபாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.


அத்துடன், வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள், தேர்தல்கள் கண்காணிப்பு தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு தயாராகுமாறு அரசாங்க செய்தித் தொடர்பாளர், பொலிஸ்மா அதிபர், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் நீர் போக்குவரத்து சபை மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றுக்கு உத்தியோக பூர்வமான அறிவிப்பை விடுத்துள்ளோம்.

மேலும், இம்முறை பிரசார செலவீனங்கள் சம்பந்தமாகவும் அதீதமான கவனத்தை நாம் செலுத்தவுள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

இதேநேரம், ஜனாதிபதியின் பதவிக்காலம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் அங்கத்தவர்களை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள மனு தொடர்பிலும் நாம் கரிசனை செய்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# எசல பெரஹெர உற்சவத்தில் குழப்பமடைந்த யானை
## 13 பேர் காயம்



(கண்டி)
கதிர்காமம் எசல பெரஹெர உற்சவத்தின் முதல் நாள் உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், பெரஹெர உற்சவத்தில் பங்கு பற்றிய யானை ஒன்று குழப்பமடைந்ததால் 13 பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, பெரஹெர உற்சவத்தில் பதற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 13 பேர் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)

# தேர்தலைப் பிற்போட அனுமதிக்கமாட்டோம்
## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
பொதுமக்களின் ஜனநாயக அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை மறுதலிக்கும் வகையில் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதை அனுமதிக்கவே முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரட்ண தெரிவித்தார்.

அத்துடன், ஜனா திபதி தேர்தலை நடத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு எதிராக இலங்கை சட்டத் தரணிகள் சங்கமும் உயர் நீதிமன்றில் ஆஜராகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி வர்த்தகரான சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு இன்று திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான விடயம் பொது மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தி அவர்களின் சுதந்திரமான தெரிவுகளுக்கு இடமளிப்பதாகும். அந்த வகையில் தொடர்ச்சியாக நாம் தேர்தல்களை எந்தவொரு காரணத்துக்காகவும் பிற்போடக்கூடாது என்பதை வலியுறுத்தி வந்துள்ளோம்.

மக்களின் இறைமை பாதுகாக்கப்படும் அதே நேரம், நாட்டின் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என் பதிலும் நாம் தொடர்ச்சியாகவே இறுக்கமான நிலைப்பாட்டுடன் இருக்கின்றோம்.

அந்த வகையில், ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தையும் நாம் வன்மையாக கண்டிப்புடன் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக செயற்படுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில், உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிப்பதற்கு கோரும் மனுவுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் ஆஜராகவுள்ளது.

அத்துடன், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் உயர்நீதிமன்றத்திடம் தன்னுடைய பதவிக் காலம் தொடர்பில் வினவியபோது உயர்நீதிமன்றம் ஐந்து ஆண்டுகள் என்றே அறிவித்துள்ளது. ஆகவே உயர்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட விடயத்தினை மீள கேள்விக்கு உட்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## உலகக் கிண்ணங்களை வென்ற கப்டனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்த பிசிசிஐ

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் எம்.எஸ். டோனி நேற்று தனது 43 ஆவது பிறந்தநாளை தனது மனைவியுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

இந்த கொண்டாட்டத்தில் பாலிவுட் நடிகர் சல்மான்கானும் கலந்து கொண்டு எம்.எஸ். டோனிக்கு வாழ்த்து தெரிவித்தார்.


பிறந்தநாள் கொண்டாடும் எம்.எஸ். டோனிக்கு ரவீந்திர ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தவிர சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள், பிரபலங்கள் என பலத்தரப்பினரும் எம்.எஸ். டோனிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர்.


எம்.எஸ். டோனியின் பிறந்த நாளை ஒட்டி ராஜஸ்தான் ராயல்ஸ் அணி நிர்வாகம் தனது எக்ஸ் பக்கத்தில் சிறப்பு புகைப்படம் ஒன்றை பகிர்ந்து வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரி-20 உலகக் கிண்ணம், ஒருநாள் உலகக் கிண்ணம், சாம்பியன்ஸ் டிராபி கிண்ணத்தை எம்.எஸ்.டோனி பிடித்திருக்கும் புகைப்படத்தை பிசிசிஐ தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளது. (நி)




## ஓய்வு பெறுகிறார் ரொனால்டோ



யூரோ சம்பியன்ஷிப் கால்பந்தாட்டப் போட்டிகள் ஜேர்மனியின் ஹாம்பெர்க் நகரில் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற காலிறுதிப் போட்டியில் பிரான்ஸ் மற்றும்போர்த்துக்கல் ஆகிய அணிகள் மோதின.

120 நிமிடங்கள்வரை நீடித்த குறித்த ஆட்டத்தில் 2 அணிகளிலும் எவ்வித கோல்களையும் பெறாததால் வெற்றியைப் பெனால்டி மூலம் தீர்மானிக்க முடிவெடுக்கப்பட்டது.

இதற்கமைய பெனால்டி ஆட்டத்தில் பிரான்ஸ் அணி 5 பெனால்டி கோல்களை விளாசி 5-3 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்த நிலையில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கடைசி யூரோ சம்பியன் ஷிப் தொடர் தோல்வியுடன் நிறைவடைந்துள்ளது.


முன்னதாக இந்தத் தொடரோடு யூரோ போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக ரொனால்டோ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஓய்வை அறிவித்தார் மல்யுத்த வீரர் ஜோன்சீனா

உலகப் புகழ்பெற்ற மல்யுத்த வீரர் ஜோன்சீனா WWE மல்யுத்த போட்டிகளிலிருந்து தான் ஓய்வு பெறவுள்ளதாக நேற்று அறிவித்துள்ளார்.

கனடாவில் அமைந்துள்ள WWE இல் World Wrestling Entertainment Institute) நேற்று நடைபெற்ற Money in the Bank போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜோன்சீனா தனது ஓய்வு தொடர்பாக தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர், இருபது வருடங்களாக மல்யுத்த போட்டிகளில் பல்வேறு தடைகளை கடந்து வெற்றிகளை சந்தித்துள்ளதாகவும், 2025 இல் நடைபெறவுள்ள WWE மல்யுத்த போட்டியுடன் தான் ஓய்வு பெறவுள்ளதாகவும் தான் கலந்து கொள்ளப் போகும் இறுதிப் போட்டியை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய புத்தாண்டு ஹிஜ்ரி 1446 இன்று மலர்கிறது

துல்ஹஜ் மறைகிறது. முஹர்ரம் பிறக்கிறது. இஸ்லாமிய புத்தாண்டு இன்று மலர்கிறது. அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1445 ஐ கடந்து 1446 இல் காலடி வைக்கிறோம்.


நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் வினால் உலகத்திற்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்து கொள் வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்பு முனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ் லாமிய புதிய வருடம் கணிக்கப்படு கிறது. நபி (ஸல்) அவர்களும் நபித் தோழர்களும் கி.பி. 622 இல் மக்கா விலிருந்து மதீனாவுக்கு புலம் பெயர்ந் தமை ஹிஜ்ரத் என அழைக்கப்படுகிறது.

எப்பொழுது முதல் இஸ்லாமிய வரு டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித் தோழர்களை அழைத்து ஒன்று சேர்த்து ஆலோ சனை கேட் டார்கள். அப்போது பலரும் பல மாதங்க ளைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ் லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம்




மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர் கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடி வெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளை யும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதி பலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க் கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வா கும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ் லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம் எம் வாழ்வில் எத்தகைய தீய செயல்களை விட்டும்



கலாபூஷணம் பரீட் இக்பால்
-யாழ்ப்பாணம்

ஒதுங்கி புதிய வாழ்விற்கு எம்மைத் தயார்படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த வருடத்தில் அமைந்த செயற்பாடுகளை ஒரு கணம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை உண்டு. எத் தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தேன்? பர்ளு தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றினேனா? எத்தனை தட வைகள் தஹஜ்ஜத் தொழுகைகளை நிறைவேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறைவேற் றினேன்? எனது சொத்திலிருந்து எத் தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்க ளுடனும் இரத்த உறவுகளுடனும் உற வுகளைப் பேணி நடந்தேனா?

இவ்வாறு இறைவனுக்கும் மனித னுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றி யுள்ளேன் என எமக் குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவ றுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவமன்னிப்பு தேடிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுட் காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என் பதனை நினைவில் நிறுத்திக் கொள் வோம். இஸ்லாமிய புதுவருடம் ஹிஜ்ரி 1446 இல் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக்கசப் புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோ தரத் துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வை தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!!

# கனடா செல்ல முயன்ற யாழ். இளைஞன் கைது

(கொழும்பு)


போலியான இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடாவுக்கு செல்லவிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 வயது டைய இளைஞர் ஒருவரே இவ்வாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் களத்தின் எல்லை பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள் ளார். (நி)


## 100வது பிறந்த நாள் நினைவு அஞ்சலி

அமரர்.
ஸ்ரீமதி பரமேஸ்வரி தர்மலிங்கம்

(சுகாதார போதனாசிரியரும் பாடநூல் ஆசிரியருமான அமரர்.ஸ்ரீமான் . இ.தர்மலிங்கம் அவர்களின் பிரியபத்தினி)
–புன்னாலைக்கட்டுவன்–



ஊன் தந்து, உயிர் தந்து, உருவம் தந்து
உலகினிலே ஏற்றமுறு வாழ்வும் தந்து
பாரினில் எம்மை சிறக்க வைத்து
விண்ணிடை ஏகியே தெய்வமானீர்!
மண்ணிலே வாழும் காலம் மறக்குமோ
உங்கள் புண்ணியச் செயல்கள் யாவும்,
அண்ணல் ஐங்கரன் பாதம் பற்றியே
அஞ்சலி செய்கின்றோம்

தோற்றம்–08-07-1924
மறைவு -27-03-2001

(141)

த.நந்தகுமாரன்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


# இராசிபலன்

08.07. 2024
ஆனி 24, திங்கட்கிழமை
திருதியை முழுவதும்

பூசம் காலை 7.17 மணிவரை
சுபநேரம் 11.58-1.28 மணிவரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை

சந்திராஷ்டமம் - கேட்டை

வளவன்

**மேஷம்** – அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக் கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** – கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங் களில் கண்ணும் கருத் துமாக இருப்பீர்கள், விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**துலாம்** – செய் தொழிலை விரு த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மகரம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற லாம், சென்ற இடங் களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**ரிஷபம்** – சகோதர வழியில் ஒத் துழைப்புக்கள் கிடைக் கும் வாய்ப்புண்டு, தொழிலில் போட்டி கள் மாறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சேமிப்பை அதி கரிக்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** – குடும்பத்தில் அனை வரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, விருந்தினர் வருகை யுண்டு, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** – வீட்டு உபயோகப் பொரு ட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந் தினர் வருகையுண்டு, தொழில் நலன்கருதி முக்கிய முடி வுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய் வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** – கடினமான வேலை களைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள் வீர்கள், நாவன்மை யால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** – குடும்பத்தில் கலகலப் பான சூழ்நிலை உரு வாகும், புதிய பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்காலம் இனிமை யாக அமைய திட்டங்கள் தீட்டு வீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** – கேட்ட இடத்தில் உதவி கள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மீனம்** – நீண்ட நாட்களாக திட் டமிட்டிருந்த காரியம் இன்று நடைபெறலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

அயராமல் உழைப்பவனே உண்மையான மேதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடியே 70 லட்சம் பேர்

## வாக்களிக்க தகுதி- தேர்தல் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்க ளிப்பதற்கு ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் ஜனாதிபதி தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியல் இந்த மாதம் முதலாம் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.


கடந்த 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கையை விடவும் இந்த ஆண்டில் பத்து இலட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)



யா/இராமநாதன் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி உள்ள மாணவர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் அதிபர் திருமதி அம்பிக்கை சிவஞானம் தலைமையில் பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

## வரலாற்றுச் சிறப்புமிக்க

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ பெருவிழா



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச்சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

காம்யோற்சவப் பெருவிழா நாட்களில் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடனத் திருவிழாவும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கைலாச வாகனத் திருவிழாவும் ஓகஸ்ட் முதலாம் திகதி வியாழக் கிழமை நண்பகல் வேட்டைத் திருவிழாவும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை சப்பரத் திருவிழாவும் ஓகஸ்ட் 3 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 4 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தின சபாபதிக்குருக்கள் அறிவித்துள்ளார். (க)

# வாகனங்களை நிறுத்துவதற்கு தகுந்த இடத்தை தெரிவு செய்யுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

சன நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் வீதியின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்துவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நெல்லியடி 750 வீதியில் காலையிலும் மாலையிலும் இவ்வாறு வாகனங்களை நிறுத்துவதால் விபத்துகளும் இடம்பெறுகின்றன.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வாகனங்களை நிறுத்துவதற்கு பாதுகாப்பான இடங்களை ஒழுங்கு செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 140 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 180 | 150 | 200 | 200 | 250 |
| தக்காளி | 350 | 500 | 400 | 500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 160 | 100-140 | 200 |
| கோவா | 300 | 300 | 350 | 250 | 250 |
| கரட் | 350 | 550 | 600 | 400 | 500 |
| பூசணி | 170 | 140 | 200 | 150 | 200 |
| புடோல் | 140 | 300 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 100 | 150-200 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 | 300-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 240 | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 300 | 250 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 250-400 | 400 |
| லீக்ஸ் | 600 | 500 | 600 | 380 | 600 |
| பீற்றூட் | 800 | 450 | 600 | 500 | 500 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 650 | 700 | 500-600 | 900 |
| போஞ்சி | 800 | 650 | 700 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | -- | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 600 | 800 | 800 | 600-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 120 | 80-100 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | -- | 480 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 200 | 200 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 80 | 80 | 100 | 80 |

# வடக்கை வந்தடைந்தது சீனாவின் பொருத்து வீடுகள்



(யாழ்ப்பாணம்)

சீன அரசாங்கத்தினால் வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 500 பொருத்து வீடுகள் இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளன.


அவற்றில் ஒரு தொகுதி வீடுகள் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு உதவுவதற்காக சீன அரசு வீடுகள், அரிசி மற்றும் வலைகளை வழங்குவதற்கு இணங்கியதன் அடிப்படையில் தற்போது அப்பொருட்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-33-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டி

# 2 ஆம் இடத்தைப் பெற்றது யாழ்.மருத்துவபீட அணி



(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவபீடங்களிற்கு இடையிலான உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியில் யாழ்.மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இவ் உடற் கூற்றியல் வினாடி வினாப் போட்டியானது இரண்டாவது முறையாக இவ்வருடமும் நடைபெற்றது.

இரு பகுதிகளாக நடைபெற்ற இப் போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றி இருந்ததுடன் முதல் பகுதி முடிவில் மூன்று சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக் கழகங்களை சேர்ந்த மருத்துவ பீட அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

மேற்படி மூன்று அணிகளிற்கும் இடையிலான இறுதி சுற்றுப்போட்டியானது கடந்த ஆனி மாதம் 30 ஆம் திகதி இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்முடிவில் கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும் யாழ்.மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தையும் பேராதனை மருத்துவ பீட அணி மூன்றாம் இடத்தையும் முறையே பெற்றுக் கொண்டன. (நி)

# போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சமூகப் பணிகளுக்குப் பங்கம் செய்யாதீர்கள்

## துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை அறிக்கை

சமய சமூகப் பணி செய்கின்றவர்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்ற பாவச் செயலை எவரும் செய்து விடாதீர்கள் என தெல்லிப்பழை துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் ஆன்மீகப் பணிகளோடு சமூகப் பணிகளையும் தன்னகத்தே கொண்டு பரந்துபட்ட பெருவிருட்சமாக சமூகத்தில் அறப்பணிகள் பலவற்றை ஆற்றி வருகின்றமை யாவரும் அறிந்த தொன்றாகும்.

அத்தோடு தாய்,தந்தையரை இழந்து தவிக்கும் பெண் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு துர்க்காதேவி மகளிர் இல்லம் உருவாக்கப்பட்டது.

இம் மகளிர் இல்லம் பிள்ளைகளின் முறையான பராமரிப்புக்கும் நன்னடத்தைக்கும் சீரான கல்வியை கற்பதற்கும் உகந்த இடமாகத் துர்க்காதேவி மகளிர் இல்லம் காணப்படுகின்றது.

அத்துடன் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள், மகளிர் இல்லத்திற்கு ஓய்வு பெற்ற பெண் அதிபர் ஒருவரை நியமித்து அவரின் மேற்பார்வையில் இல்லத்தை வழி நடத்துகின்றார்.

ஆதரவற்றவர்களின் இல்லம் என்ற சிந்தனை மனதில் எழாதவாறு ஒவ்வொரு விடயங்களையும் பார்த்துப் பார்த்து நிறைவு செய்கின்றார்.உலக நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் இவரது பணிகளுக்கு ஆதரவாக உதவி வருகின்றனர்.

அத்துடன் நிர்வாக சபை, தர்மகர்த்தா சபை போன்றவற்றின் கண்காணிப்பின் கீழ் 40 வருடங்களாகச் செயற்படுகின்ற இவ் அமைப்பின் ஊடாகப் பல அரிய செயல்களை மிகச் சிறப்பாக ஆற்றி வருகின்ற நிலையில், எமது சைவத்தை காக்க வந்த ஆன்மீகத் தலைவர் மீது இதுவரை காலமும் இல்லாத அபாண்டமான குற்றச்சாட்டு, தற்போது சிலரிடம் ஏற்பட்ட காழ்ப்புணர்வு காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்து சமயத்திற்குப் பாதிப்பு ஏற்படுவதோடு ஆதரவற்ற மாணவிகளின் எதிர்கால வாழ்க்கையும் கேள்விக் குறியாக அமைவதோடு உளரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது.

சமூகப் பணிகளுக்கு இடையூறான இத்தகைய போலிக் குற்றச்சாட்டுக்களை துர்க்காபுரம் பெண்கள் தொண்டர் சபையினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட 11 இலங்கையர்

(கொழும்பு)

இணைய குற்றங்களில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட 11 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இணையக்குற்றங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான தெற்காசியர்கள் மற்றும் ஆபிரிக்கர்கள் ஐக்கிய அரபு இராச்சிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

அந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, இணையவழி கடத்தல் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் 37 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டது.

பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் ஏனைய இலங்கையர்களும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்கள் எனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சுற்றுலா விசாவில் இலங்கையில் தங்கி யிருந்து பண மோசடி மற்றும் இணையம் ஊடாக ஆட்கடத் தல்களை முன்னெடுத்த குற்றச் சாட்டின் கீழ், குற்றப்புலனாய்வு திணைக்களமும் பொலி ஸாரும் இணைந்து இந்தியர் கள் மற்றும் சீன பிரஜைகள் உட்பட 209 வெளிநாட்டவர்களை அண்மையில் பல சந்தர்ப்பங்களில் கைது செய்திருந்தனர். (நி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.நா.சிவநேசன்

பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)
மது கல்வி வலயம்

8 வருடங்கள் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவாகி மது கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக 08.07.2024 இன்று பதவியை பொறுப்பேற்றுக் கொள்ளும் திரு.நா.சிவநேசன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்-
அதிபர்கள் சங்கம், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, விவசாயம்
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14633

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 8 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:MSc,Mechanical Engineering, Engineer
எதிர்பார்ப்பு:Engineer,IT,Business Management
தொ.இ: B/14634

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 69 ½ 7இல் செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில்: Bsc,Msc,PHD (Following)-USA
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14639

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 42 1/4 1இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: Swiss மட்டும்
தொ.இ: G/14652

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: HNDA, Accountant (PVt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14658

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 24 4இல் செவ்
உயரம்: 5'1"
தகைமை/ தொழில்: Bsc
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், பட்டதாரி
தொ.இ: G/14659

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

சர்ச்சைக்குரிய சட்டமூலம்

# ரத்து செய்யப்போவதாக பிரித்தானிய பிரதமர் அறிவிப்பு




(லண்டன்)

பிரித்தானியாவுக்கு உரிய ஆவணங்களின்றி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு நாடு கடத்துவதற்கான சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை இரத்து செய்வதாக அந்நாட்டின் புதிய பிரதமர் கெயர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார்.

பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர், நேற்று நடைபெற்ற முதல் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

ருவாண்டாவுக்கு அகதிகளை அனுப்பும் திட்டம் முடிந்துபோன ஒன்று எனவும், பிரித்தானியாவை நோக்கி அகதிகள் வருவதை அந்தத் திட்டம் கட்டுப்படுத்தும் என நினைப்பது தவறு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அத் திட்டத்தின் விளைவுகள் எதிர்மாறாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து, அநேகமானோர் வளமான வாழ்வாதாரத்துக்காக பிரித்தானியாவிற்கு அடைக்கலம் தேடி வருவது தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

அவ்வாறு அடைக்கலம் தேடும் அகதிகளை பணத்துக்காக சட்டவிரோதக் கும்பல் ஆபத்தான முறையில் பிரித்தானியாவுக்கு கடத்தி வரும் சம்பவங்களும் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் பிரித்தானியனாவின் புதிய பிரதமர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் போரிஸ் ஜோண்ஸனால் பிரித்தானியாவுக்கு உரிய ஆவணங்களின்றி அடைக்கலம் தேடி வருவோரை ருவாண்டாவுக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

அடைக்கலம் கோரி அகதிகள் அளிக்கும் விண்ணப்பங்களை சரிபார்த்து, அவர்களுக்கு புகலிடம் அளிப்பது குறித்து பிரித்தானியா முடிவு செய்யும் வரை, அவர்கள் ருவாண்டா தலைநகர் கிகாலியிலுள்ள தடுப்பு முகாமில் தங்க வைக்கப் பட்டிருப்பார்கள் எனவும், அதுவரை அவர்கள் அனைவரும் சட்டவிரோத அகதிகளாகவே கருதப்படுவர் எனவும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோண்ஸனால் அறிவிக்கப் பட்டது.

சர்ச்சைக்குரிய இந்த திட்டத்தை முன்னாள் பிரதமர் ரிஷி சுனக்கின் தலைமையிலான அரசும் முன்னெடுத்துச் சென்றது.

எனினும், இந்த திட்டத்துக்கு அகதிகள் நல உரிமை அமைப்பாளர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அகதிகளை ஏற்றி ருவாண்டா செல்லும் விமானங்களுக்கு ஐரோப்பிய யூனியன் மனித உரிமை நீதிமன்றமும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தடை விதித்தது.

எனினும் பல எதிர்ப்புகளையும் மீறி, சட்ட விரோதமாக நுழையும் அகதிகளை நாடு கடத்துவதற்கான சட்டமூலத்தை கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் ரிஷி சுனக் நிறைவேற்றினார்.

இந்நிலையில், பிரித்தானியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள கெயர் ஸ்டார்மர், உரிய ஆவணங்களின்றி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு நாடு கடத்துவதற்கான சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை இரத்து செய்வதாக அறிவித்துள்ளார்.

கெயர் ஸ்டார்மர் தான் பிரதமராக பதவியேற்றதன் பின்னர், அகதிகளை, ருவாண்டாவுக்கு நாடு கடத்தும் சட்டத்தை இரத்து செய்வதாக அறிவித்துள்ளமை அவர் பிறப்பித்த முதல் உத்தரவு என கூறப்படுகின்றது.

இந்நிலையில், தேர்தல் பிரசாரத்தின்போதே குறித்த சட்டத்தை தான் இரத்து செய்வேன் என கெயர் ஸ்டார்மர் வாக்குறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# காசாவில் மக்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்

## 15 பேர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலையொன்றின் மீது **இஸ்ரேல் மேற்கொண்ட** தாக்குதலில் 15 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய காசாவின் நுசெய்ரட் அகதிமுகாமில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருந்த கட்டடத்தின் மீது இடம்பெற்ற தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர்.

புழுதியும் இடிபாடுகளும் நிறைந்து காணப்படும் புகை மண்டலம் நிறைந்த வீதியில் பொதுமக்கள் அலறுவதை காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

மும்முரமான சந்தைக்கு அருகிலிருந்த கட்டடத்தின் மேல் தளம் இலக்கு வைக்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன. 7000 பேர் அந்த கட்டடத்தில் அடைக்கலமடைந்திருந்தனர் என பிபிசி தெரிவித்துள்ளது.

குரான் ஓதிக் கொண்டிருந்தவேளை தாக்குதல் இடம்பெற்று சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

அவர்கள் இந்த பாடசாலையை முன்னெச்சரிக்கையின்றி இலக்கு வைப்பது இது நான்காவது தடவை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# அணு அ

# நேட்டோ



அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டில் உக்ரைன் மீது போர் தொடுத்தது.

## ஈரானின் புதிய ஜனா



(டெஹ்ரான்)

ஈரானுக்கான புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது.

ஆனால் அன்றைய தினம் 40 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகியிருந்ததாக ஈரானிய செய்திகள் தெரிவித்திருந்தன.

பதிவான வாக்குகளில் 42.5 சதவீதவாக்குகளை பெற்று சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்த 69 வயதான ஈரானின் முன்னாள் **சுகாதார அமைச்சர் மசூத்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ஆயுத போராக மாற்றாதீர்கள்!

# டா நாடுகளுக்கு ரஷ்யா எச்சரிக்கை!



**(மொஸ்கோ)**

**உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்வதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விட வேண்டாம் எனவும் ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் இந்தப்போர் விரைவில் அணு ஆயுத போராக மாறிவிடும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

லான
கூட்ட
வதற்கு
ஷ்யா
ஆண்
போர்

உக்ரைனை எளிதில் கைப்பற்றி விடலாம் என நினைத்து போரை தொடங்கிய ரஷ்யாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியதுடன் தற்போது வரை போர் தொடர்கின்றது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதால் ரஷ்யாவுக்கு கடும் சவாலை உக்ரைன் அளித்து வருகிறது.


இதனால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் போர் நீடித்து வருவதுடன், இந்த போரின் போக்கு தற்போது ரஷ்யாவுக்கு சாதகமாக சென்று கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக இந்த போரில் தங்கள் இலக்கை எட்டுவதற்கு அணு ஆயுதத்தை பயன்படுத்துவதற்கான தேவை இருக்காது என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்யா அணு ஆயுதத்தை பயன்படுத்தாது என மேற்கத்தேய நாடுகள் நினைப்பது தவறு எனவும் ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்வதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விட வேண்டாம் எனவும் ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் இந்தப் போர் விரைவில் அணு ஆயுத போராக மாறிவிடும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## ய ஜனாதிபதியாகிறார் பெசெஸ்கியன்



புதிய
ப்பதற்
ம் 28
ம் 40
டுமே
ஈரா
திருந்
42.5
பற்று
த 69
னாள்
மசூத்

பெசெஸ்கியன் முன்னிலையில் இருந்தார். 38.6 சதவீத வாக்குகளைப் பெற்று தீவிர வலதுசாரி தலைவரான சயீது ஜலீலி இரண்டாம் இடத்தில் இருந்தார்.

ஆனால் ஈரான் சட்டப்படி வெற்றி பெறுவதற்கு வேட்பாளர் குறைந்தது 50 சதவீத வாக்குக்கள் பெற்றிருக்க வேண்டும். எனவே முதல் இரண்டு இடத்தைப் பிடித்த இருவரையும் முன்னிறுத்தி கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடந்தது.

இந்த வாக்குகள் தற்போது எண்ணப்பட்ட நிலையில் மொத்தம் பதிவான கிட்டத்தட்ட 30 மில்லியன் வாக்குகளில் (49.8 சதவீதம்), பெசெஸ்கியன் 17 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளை சுமார் (56 சதவீதம்) வாக்குக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

சயீது ஜலிலி 13 மில்லியன் வாக்குகளுடன் பின் தள்ளப்பட்டுள்ளார்.

எனவே ஈரான் அரசின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெசெஸ்கியன் பதவி ஏற்க உள்ளார். மசூத் பெசெஸ்கியன் தொழில்முறையாக இதய அறுவை சிகிச்சை நிபுணராக இருந்துள்ளார்.

இவர் ஈரானில் தற்போது கடுமையாக பின்பற்றப்பட்டு வரும் பெண்கள் பர்தா அணியும் விதிகள் கட்டாயமாக்கப்பட்டதற்கு எதிரானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## செவ்வாய் கிரகத்தில் பாலைவனப் பாசி வளர்ப்பு

# சீனா ஆராய்ச்சி குழு கண்டுபிடிப்பு

(பீஜிங்)

கடுமையான வறட்சி மற்றும் குளிரைத் தாங்கும் ஒரு வகை பாலைவனப் பாசியை செவ்வாய் கிரகத்தில் வளர்க்கலாம் என்று சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது.

இந்தப் பாசிகள் தண்ணீர் இல்லாமல் வறண்ட கால நிலையையும், மைனஸ் 80 டிகிரி செல்சியஸ் வரை குளிரான வெப்பநிலையையும் தாங்கும் என்று கூறப்படுகிறது.

சீனாவின் சுற்றுச்சூழல் மற்றும் புவியியல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு நடத்திய புதிய ஆய்வின்படி, செவ்வாய் கிரகத்தில் வாழும் இந்த வகை பாசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடும் வறட்சியையும் குளிரையும் தாங்கக்கூடிய பாலைவனப் பாசி வகையை சிவப்பு கிரகம் அல்லது செவ்வாய் கிரகத்தில் பயிரிடலாம் என கண்டறியப்பட்டுள்ளது.



திபெத்திய பீடபூமி, மொஜாவே பாலைவனம் மற்றும் அண்டார்டிகா போன்ற இடங்களில் இந்த வகைப் பாசிகள் பல ஆண்டுகள் உயிர்வாழும் என்று ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த வகை பாசி சின்ட்ரிச்சியா கேனினெர்விஸ் என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக பாசிகள் தண்ணீரின்றி வாழ முடியாது ஆனால் இந்த பாசி தண்ணீர் இல்லாமல் மைனஸ் 80 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வாழ முடியும்.

சிறிதளவு தண்ணீரைச் சேர்ப்பதன் மூலம், இந்த பாசிகள் உயிர்பெற்று ஒளிச்சேர்க்கையை "வினாடிகளில்" தொடங்குகின்றன.

இது எந்த கிரகத்திலும் மனிதன் உயிர்வாழ பயன்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த பாசியானது கதிர் வீச்சை எதிர்க்கும் திறன் கொண்டது என்றும் கூறப்படுகிறது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### குக்குடத்தவரை / கோழி அவரை


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Canavalia ensiformis**
**Family - Fabaceae**
**Engl - Sword Bean / Jack Bean**

இது பல்லாண்டு அல்லது ஈராண்டு வாழக்கூடிய ஓர் ஏறுகொடி மூலிகையாகும். தண்டு அழுத்தமான கிளைகளைக் கொண்டது. இலைகள் முக்கூட்டு ஒழுங்கானது. கோள வடிவம் அல்லது முட்டை வடிவ இலைகள். இலைகளில் மென்மையான சுனைகள் காணப்படும். பூக்கள் ஊதா நிறம். விதைகள் 6-8 காணப்படும். விதைகள் சிவப்புக் கலந்த மண்ணிற மானவை, சிறிய அவரை வடிவக் காய்களைக் கொண்டது. வீட்டுத் தோட்டங்களில் புரதச்சத்து நிறைந்த அவரை இன காய்கறியாக வளர்க்கலாம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இளம் பிஞ்கள் உண்ணக் கூடியவை.

கோழியவரையின் உலாந்த

திலும், பனிக் காலத்திலும் அதிகமாக இருக்கும். பயிரிட்டு நான்கு மாதங்களில் அறு வடை செய்யலாம். வாரத்தில் இரண்டு நாட்கள் கோழியவரை பிஞ்சுக் காய்களை சமைத்து உண்டு வர உடலின் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரித் துப்பதுடன், தோல் நோய்களும் ஏற்படாமல் தடுக்கக்கூடியதாக இருக் கும்.

நீண்ட காலமாக கரப்பன் தோல் நோய் இருப்பவர்கள் கோழியவரை இலைச்சாற்றை 400 மில்லி தேங்காய் எண்ணெய், 400 மில்லி காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கிச்சிலிக்கிழங்கு ஒவ்வொன்றும் 2.5 கிராம் அளவு எடுத்து சிறிது நீர் விட்டு கற்கமாக அரைத்து மேற்படி எண்ணெய், சாறு

**100 கிராம் கோழியவரையின் சத்துக்கள்**

| போசனைப் பெறுமானம் | இளம்பிஞ்சு | விதைகள் |
|---|---|---|
| ஈரலிப்பு | 78.5 கிராம் | 12.0 கிராம் |
| புரதம் | 6.9கிராம் | 25.4 கிராம் |
| கொழுப்பு | 0.5 கிராம் | 1.3 கிராம் |
| நார்ச்சத்து | 3.3 கிராம் | 4.9 கிராம் |
| காபோவைதரேற்று | 13.3 கிராம் | 57.1 கிராம் |
| கல்சியம் | 33.0 மில்லி கிராம் | 96.0 மில்லிக்கிராம் |
| பொஸ்பரஸ் | 66.0 மில்லிக்கிராம் | 34.3 மில்லிக்கிராம் |
| இரும்பு | 1.2 மில்லிக்கிராம் | 4.9 மில்லிக்கிராம் |
| தயமின் | 0.22 மில்லிக்கிராம் | 0.45 மில்லிக்கிராம் |
| றைபோபிளேவின் | 0.10 மில்லிக்கிராம் | 0.15 மில்லிக்கிராம் |
| நியாசின் | 2.0 மில்லிக்கிராம் | 2.1 மில்லிக்கிராம் |
| விற்றமின் C | 32.0 மில்லிக்கிராம் | ---- |
| விற்றமின் A | 15.0 மைக்ரோகிராம் | 10.0மைக்ரோகிராம் |

விதைகள் கலங்களின் பெருக்கத்தைக் குறைத்து கல வளர்சியை குறைக்கும் தன்மையுடையவை. இதனால் ஈரல் நோய்களில் ஏற்படும் கலப் பெருக்கத்தைக் கடப்படுத்துவதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது. இதன் இலைச்சாற்றை நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி வடித்து கரப்பான், சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேல் பூச்சாக பயன் படுத்தலாம்.

கோழியவரையின் காய்களை மற்றைய அவரை இனங்களுடன் சேர்த்து கறியாக சமைத்து சாப்பிட்டு வர பித்த கபத்தால் உண்டாகும் நோய்கள் தீரும் உடல் உரமாகும்.


கோழியவரை இலைச்சாற்றுடன் கொஞ்சம் சுண்ணாம்பை சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் குழைத்து புண்ணின் மேல் பூச புண் ஆறும்

பயிர்ச்செய்கையை சித்திரை மாத மத்தியிலிருந்து ஆனி மாதம் வரை மேற்கொள்ளலாம். அவரை இனத்தைச் சேர்ந்தமையால் வேர் முடிச்சுக்கள் காணப்படும். எனவே தாமதமாக வளிமண்டல நைதரசனை பதிக்குமாற்றலால் பசளையிடத் தேவையில்லை. நீர்ப்பற்றான இடமில்லாது இருப்பின் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது.

பயிர்ப்பெருக்கம் மழைக் காலத்

கற்கம் முன்றையும் ஒன்றாக் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து மெழுகுப் பதத்தில் இறக்கி ஆறவிட்டு மயிலிறகால் பூசி வர கரப்பான் நோய் நீங்கும்.

கோழியவரை எனும் மூலிகை வடமாகாண பெருபுதர்க்காடுகள் பிரதேசங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்படும். இதன் காய்கள் இளம் பஞ்சுக்களாக இருக்கும் போதே பயன்படுத்த வேண்டும். அதேபோல் இதன் விதைகளை நன்றாகமுற்றாத போதே பயன்படுத்த வேண்டும். உடல் எடையைக் குறைக்க, தலை



களில் பலத்தை ஏற்படுத்த.நோய் எதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்த, புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு மேற்படி கோழியவரைப் பிஞ்சுனைள பயன்ப் டுத்தலாம்.

கோழியவரை பிஞ்சுகளை அவரைகளின் அரசன் என்றும். குறிப்பிடுவர். மற்றைய அவரை இனங்களைவிட மருத்துவக் குணங்கள் நிறைந்தவை. கிராமப் புறங் களில் தம்பட்ட அவரை எனவும் குறிப்பிடுவர்.

## இன்று ஒரு தகவல் 166



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

### அறிமடம் சான்றோர்க்கு அணி

அறிந்தும் அறியாமல் இரு என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்கள் எல்லாம் அப்படித்தான் நடந்து கொள்ளுவார்கள்.

பழமொழி நானூறு என்று ஒரு சங்க இலக்கியம். அதிலே ஒரு பழமொழி வருகிறது. அதாவது, "அறிமடம் சான்றோர்க்கு அணி" என்று அறிந்தும் அறியாததும் மாதிரி நடந்து கொள்வது ஞானிகளின் சிறப்பு என்று அதற்கு அர்த்தம்.

பக்தி அதிகமாக போய்விடுவதனால் சிலர் பைத்தியம் மாதிரி கூட நடந்து கொள்ளுவார்கள். அதை நாம் தவறாகப்புரிந்து கொள்ளக் கூடாது.

ஒரு முல்லைக் கொடி வளர வேண்டும் என்பதற்காக அதற்கு தன்னுடைய தங்கத்தேரையே நிறுத்தி வைத்தாரே பாரி! அவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ஒரு மயில் குளிரினாலே அவதிப்படுகின்றது என்பதற்காக அதற்கு தன்னுடைய பீதாம்பரத்தையே போத்தினாரே பேகன்! அவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

வரகுணபாண்டியன் கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? அவர் கூட பக்தி அதிகமாகப் போனதாலே ஒரு சமயம் வித்தியாசமாக நடந்து கொண்டார்! வேறு ஒன்றும் இல்லை.

திருவிடைமருதூர் இருக்கல்லவா அங்கே ஒரு இடத்திலே எள் காய வைத்திருந்தார்களாம்! எதற்காக? கோயிலுக்கு எண்ணெய் தயார் செய்வதற்காக!

அந்தச் சமயம் பார்த்து அந்தப்பக்கமாக ஒருவர் வந்து இருக்கிறார். எள் காயப்போட்டிருப்பதைப் பார்த்தார். என்னமோ நினைத்தார். அந்த எள்ளிலே ஒரு கை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டார். சுவாமிக்கு உபயோகப்படுத்துவதற்காக காய வைத்திருக்கிற எள்ளை இப்படி அள்ளி வாயிலே போடலாமா? அது பெரிய தவறு அல்லோ! சிவ அபராதம்!

அங்கே காவல் காத்துக் கொண்டு இருந்தவர்கள் இதைப் பார்த்து விட்டார்கள். அய்யய்யோ! அபசாரம்! அபசாரம்! என்று கத்திக் கொண்டே ஓடி வந்தார்கள். அந்த ஆளைப் பிடித்து விட்டார்கள். நேராகக் கொண்டு போய் வரகுணபாண்டியன் முன்னால் நிறுத்தினார்கள். வரகுணபாண்டியன் நிமிர்ந்து பார்த்தார். பார்த்தால் அவருக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது. ஏன் என்றால் எள்ளை அள்ளி வாயிலே போட்டுக் கொண்டாரே அவர் எப்படி இருக்கிறார் தெரியுமா? நெற்றியில் திருநீறு உடம்பெல்லாம் பக்திமயம் இப்பேர்பட்ட சிவ பக்தரா. அந்த சிவ அபராதத்தை செய்தார்? ராஜாவால் இதை நம்பவே முடியவில்லை. அதனால் மிகவும் அன்பாக அந்த ஆளைப்பார்த்து தாங்கள் ஏன் இப்படி ஒரு காரியத்தை செய்தீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு அந்த சிவ பக்தர் சொன்னர் நான் பசியின் காரணமாக அந்தக் காரியத்தை செய்யவில்லை. இந்த ஊர் எனகது மிகவும் பிடித்து போய் விட்டது. சிவ அபராதம் செய்து விட்டால் ஏழு ஜென்மங்களுக்கு இந்தக் கோவிலுக்கு செக்கு இழுக்கின்ற மாடாக பிறப்பேன் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத் தான்அப்படிச் செய்தேன் என்றார்.

அந்த ஊரிலே பிறக்க வேண்டும் அதுவும் செக்கு மாடாக பிறக்க வேண்டும். அந்த ஆலயத்திலே தொண்டு செய்ய வேண்டும். ஒரு தவறு செய்தால் தான் இது சாத்தியம் என்று புரிந்து கொண்டு அவர் அப்படி செய்திருக்கிறார். எப்பேர்பட்ட பக்தி.

வரகுணபாண்டியன் பார்த்தார். எங்கே வாயைக் கொஞ்சம் திறவுங்கள் என்றார். அந்த சிவ பக்தர் வாயைத் திறந்தார். அங்கே கூடி நின்றவர்கள் எல்லாம் ராஜா அந்த ஆளோட வாயைக் கிழிக்கப் போகிறார் என்று நினைத்தார்கள். ஆனால் ராஜா என்ன செய்தார் தெரியுமா?

அவர் வாயில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு எள்ளை எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டார். அதன் பின்பு சொன்னார். நீங்கள் செய்த அபராதத்தை நானும் செய்து விட்டேன். உங்களுடன் சேர்ந்து நானும் செக்கு இழுப்பேன் என்றார்.

இது தான் சான்றோர்கள் இயல்பு. இப்படி பக்தியினால் தவறு செய்பவர்கள் அந்தக் காலத்தில் அதிகம். புத்தி இல்லாமல் தவறு செய்பவர்கள் தான் இந்தக் காலத்தில் அதிகம்.

ஒரு அரிசி ஆலையில் நெல் காய வைத்திருந்தார்கள். அதைத் திருடி விட்டு ஒருவன் சிறைச்சாலைக்கு வந்தான். சிறைச்சாலை அதிகாரிகளிடம் மிகவும் நெருக்கமாக பழகிவிட்டான். தண்டனைக் காலம் முடிந்து விடுதலை ஆகி வெளியில் புறப்பட்டான். போவதற்கு முன் சிறைச்சாலை அதிகாரி அவனைப் பார்த்து வெளியிலே சென்று என்னப்பா செய்யப் போகிறாய்? என்றார்.

மறுபடியும் எங்கேயாவது நெல் காய வைத்திருந்தால் அதைத் திருடலாம் என்று இருக்கிறேன் என்றான்.

ஏன்டா... பாவி... நீ கொஞ்சம் கூட திருந்தவில்லையா? என்றார் அந்த அதிகாரி. திருந்தி விட்டேன் சார். இருந்தாலும் எப்போதும் உங்களிடமே தொண்டு செய்ய வேண்டும் என்று ஒரு ஆசை...! அதற்கு இது தான் வழி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை சூழலில் யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## அச்சத்தில் நோயாளர்கள்

(அக்கராயன்)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை சூழலுக்கு இரவில் வருகை தரும் யானைகளை தூரத்தில் துரத்தி விடுவதற்கான நடவடிக்கைகளை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரவு வேளைகளில் வைத்தியசாலைக்கு அருகில் யானைகள் வருகை தருவதனால் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக யானைகளினால் வைத்தியசாலை சூழல் அச்சம் மிகுந்ததாக காணப்படுகின்றது.

இது தொடர்பாக நடைபெறுகின்ற கூட்டங்களில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டாலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வடக்கில் யானைகளின் தொல்லை கூடுதலாக காணப்படுகின்றது. மாலை 4.00 மணிக்கு பின்னர் கிராமங்களுக்குள் யானைகள் வருகை தந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (நி-350)

# கந்தபுரம் ⇨ முக்கொம்பன் வீதியின் தற்காலிக புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(அக்கராயன்)

கிளிநொச்சி கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

மூன்று கிலோமீற்றர் தூரம் கொண்ட வயல்வெளி வீதி ஊடான இவ்வீதி பெருங்குன்றும் குழியுமாக காணப்பட்டதால் பேருந்துகள் பயணிக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் எடுத்த முயற்சிகள் காரணமாக தற்போது வீதியில் உள்ள பெருங்குழிகளை மூடுவதற்கான கிரவல் மண் குவிக்கப்படுகின்றது. இதன் மூலம் முக்கொம்பன் கிராம மக்கள் அக்கராயன் மருத்துவமனைக்கு இலகுவாக வருகை தர முடியும் என்பதுடன் முக்கொம்பன், கண்ணகைபுரம் கிராமங்களின் மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு இலகுவாக வருகை தர முடியும்.

குறித்த மூன்று கிலோமீற்றர் வீதியும் உலக வங்கி திட்டத்தின் கீழ் புனரமைப்பிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இத் திட்டம் நிறைவேறுமானால் அக்கராயனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான சிறந்த போக்குவரத்து பாதையாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-350)

# இடைநிறுத்தப்பட்டுள்ள குடிநீர் திட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு அக்கராயன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

பயனாளிகளில் ஒரு பகுதியினர் குடிநீருக்கு பணம் செலுத்தவில்லை எனத் தெரிவித்து கிளிநொச்சி அக்கராயனில் இரு மாதங்களுக்கு மேலாக குடிநீர் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் முன்பாக உள்ள நீர்த்தாங்கியில் இருந்து 250 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

2010 மீள் குடியேற்றத்தின் பின்னர் அக்கராயனில் குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகத்திற்கு பணம் அறவிடப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் நெருக்கடி மிகுந்த கிராம அலுவலர் பிரிவாக அக்கராயன் கிராம அலுவலர் பிரிவு காணப்படுகின்றது.

போர் காலத்திலேயே கரைச்சி பிரதேச செயலகம், கரைச்சி பிரதேச சபை, மாவட்டச் செயலகம், உதவி அமைப்புகள் மூலமாக அக்கராயனில் குடிநீர் விநியோகிக்கப்படுவது வழமை.

இக்குடிநீர் திட்டத்தினை நம்பி குடிநீருக்காக காத்திருக்கும் மக்கள் தற்போது பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மனிதாபிமான அடிப்படையில் நீர் தாங்கிகள் மூலமாவது குடிநீரினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் தற்போது 700 குடும்பங்கள் வாழ்கின்றன.

எனவே தற்போது குடிநீர் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ள அக்கராயன் மத்தி, கிழக்கு, மேற்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய மக்களின் குடிநீர் தேவையினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி-அங்கஜன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கியை பெற்றுத்தர தயார் என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரியப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அரசாங்கத்தால் போதிய மின்பிறப்பாக்கி வசதிகள் வழங்கப்படும்வரை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான மின்பிறப்பாக்கியை தற்காலிக ஏற்பாட்டில் பெற்றுக் கொடுக்க அன்பர்கள் சிலர் முன்வந்துள்ளனர்.


இதனூடாக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவுகள் உள்ளிட்டவற்றை இயங்கு நிலைக்கு கொண்டு வந்து மக்களுக்கான வைத்திய சேவையை வினைத்திறனுடன் வழங்கமுடியும் எனத் தெரிவித்தார். (நி-30-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3162

சதீஸ்




பிரமியா





ஜீவராஜ்




கயல்விழி




சிவர்சன்




அபிநயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 526





கரையோடு காலடிச் சப்தம் கேளாதபடி மெல்ல மெல்ல நடந்து போனாள். அவள் செவிகள் வெகு கவனமாக உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தன. காட்டுப் பிரதேசத்தில் இரவில் எத்தனையோ விதவிதமான சப்தங்கள் கேட்கும் அல்லவா? அவையெல்லாம் அவளுடைய கவனத்தைக் கவரவில்லை.

பின்னர், அவள் என்ன சப்தத்தைத்தான் எதிர்பார்த்தாள். இதோ!

இருவர் மெல்லிய குரலில் பேசும் சப்தம் கேட்டது. ஒன்று ஆண்குரல், இன்னொன்று பெண்ணின் குரல்.

பூங்குழலி நன்றாக மறைந்து நின்று கொண்டாள். அவர்கள் பேசுவது இன்னதென்பதைக் கவனமாக உற்றுக் காதுகொடுத்துக் கேட்டாள்.

“மந்திரவாதி! இளவரசர் கடலில் விழுந்து இறந்துவிட்டதாகத்தான் உன்னைப் போல் எல்லாரும் நம்புகிறார்கள். பழுவேட்டரையரும் உருகி மாய்கிறார். ஆனால் நான் நம்பவில்லை!” என்று அந்தப் பெண் குரல் கூறியது.

**ஐந்தாம் அத்தியாயம்**
**ராக்கம்மாள்**

பழுவேட்டரையரும், பார்த்திபேந்திரனும் சேர்ந்து கடற்கரையோரமாக உலவச் சென்ற பிறகு, நந்தினி சிறிது நேரம் தனியாக இருந்தாள். கடல் அலைகளைப் பார்த்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

“ராணி அம்மா!” என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கலங்கரை விளக்கின் காவலர் தியாக விடங்கரின் மருமகள் அங்கே நின்றாள்.

“நீ யார்?” என்று நந்தினி கேட்டாள்.

“என் பெயர் ராக்கம்மாள்!எங்கே வந்தாய்?” இதற்கு மறுமொழி சொல்லாமல் ராக்கம்மாள் நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“என்னடி பார்க்கிறாய்? என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது?”

ராக்கம்மாள் திடுக்கிட்டு, “மன்னிக்க வேண்டும், அம்மா தங்களை பார்த்ததும் இன்னொரு முகம் எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால், அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது” என்றாள்.

“என்னடி உளறுகிறாய்? எது எப்படி இருக்க முடியாது?”

“அந்த ஊமை வெறியளுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது.”

“அவள் யார் ஊமை?”

“ஈழத்தில் ஒருத்தி இருக்கிறாள்! என் மாமனாருக்குப் பெரியப்பன் மகள். சில சமயம் இங்கேயும் வருவாள்.”

“அவளுக்கும் எனக்கும் என்ன?”

“அதுதான் சொன்னேனே, உறவு ஒன்றும் இருக்க முடியாது என்று.”

“பின் ஏன் என்னைப் பார்த்ததும் அவளுடைய ஞாபகம் வந்தது?”என் கண்களின் கோளாறுதான். தங்கள் முகம்.அவள் முகம் மாதிரி இருந்ததா?”

முதலில் அப்படித் தோன்றியது. ராக்கம்மா! இப்போது அந்த ஊமை இங்கே இருக்கிறாளா?”

“இல்லை, அம்மா! அபூர்வமாக எப்போதாவது வருவாள். மறுபடியும் வரும் போது என்னிடம் அழைத்து வருகிறாயா? எதற்காக, ராணி அம்மா?”

என்முகம் மாதிரி முகம் உடையவளை பார்க்க விரும்புகிறேன். அது தான் என் கண்களின் பிரமை என்று சொன்னேனே?

எதனால் அப்படி நிச்சயமாக சொல்கிறாய்? ராணி! தாங்கள் பாண்டிய நாட்டை சேர்ந்தவர் தானே

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நரிக்குட்டி சிங்கக்குட்டியாகாது

ஒரு பெரிய கானகத்தில் ஆண் சிங்கம் ஒன்றும், ஒரு பெண் சிங்கம் ஒன்றும் சேர்ந்து வாழ்ந்து வந்தன. எப்போதும் இரண்டும் இணையாகவே சென்று வேட்டையாடி சாப்பிட்டு வந்தன. அந்தச் சிங்கத் தம்பதியருக்கு இரண்டு குட்டிகள் பிறந்தன. அதனால், ஆண் சிங்கம் பெண் சிங்கத்தை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் வேட்டைக்குச் சென்று பெண் சிங்கத்திற்கும் குட்டிகளுக் கும் இரைகளைக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் அந்த ஆண் சிங்கத்துக்கு ஒரேயொரு நரிக்குட்டி மட்டும் தான் கிடைத்தது. அது



அந்த நரிக்குட்டியைக் கொண்டு வந்து பெண் சிங்கத்திடம் கொடுத்தது.

பெண் சிங்கம் நரிக்குட்டியின் மீது இரக்கப்பட்டு உண்ணாமல் தன் சிங்கக் குட்டிகளோடு இணைத்து வளர்த்து வந்தது. நன்றாக வளர்ந்த அந்த மூன்று குட்டிகளும் ஒரு நாள் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றன. வழியில் ஒரு பெரிய யானையைப் பார்த்ததும் நரிக்குட்டி பயந்துவிட்டது. அது அங்கிருந்து ஓடியது. அதனைப் பார்த்த இரண்டு சிங்கக் குட்டிகளும் அதன் பின்னாலேயே ஓடிவந்து குகைக்குள் ஒளிந்துக் கொண்டது.

இதனைப் பார்த்த பெண் சிங்கம் நடந்ததைத் தன் குட்டிகளிடம் விசாரித்தது. யானையைப் பார்த்து இவன் பயந்து விட்டான். அதனால் நாங்களும் இவன் பின்னாலேயே வந்து விட்டோம் என்றன. பின்னர் சிங்கக் குட்டிகள் இரண்டும் நரியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன. உடனே நரிக்குக் கோபம் வந்து விட்டது. உடனே பெண் சிங்கத்திடம், இவர்கள் ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறார்கள்? நான் எந்த விதத்தில் இவர்களை விடத் தாழ்ந்தவன்? நான் இவர்களை வெல் வேன் என்று கூறியது. பெண் சிங்கம் நரியைத் தனியே அழைத்துச் சென்று, நீ சிங்கக் குட்டி அல்ல. நீ நரிக் குட்டி. யானையை வெல்லும் தீரமும் வீரமும் நரிக்கு எப்படி இருக்கும்? நரிக்குட்டிச் சிங்கக் குட்டிகளுடன் வளர்வதனாலேயே அது சிங்கக் குட்டியாகிவிடுமா? நீ நரி என்பதனை இவர்கள் அறிந்து கொள்வதற்கு முன்னர், நீ இங்கிருந்து ஓடிச் சென்று தப்பித்துக் கொள் என்று எச்சரித்தது. உடனே அந்த நரிக் குட்டி அங்கிருந்து ஓடி விட்டது.

**நீதி :**

அறிஞர்கள் அமர்ந்திருக்கும் சபையில் நீயும் அமர்ந்திருப்பதால் மட்டும் நீ அறிஞன் ஆகிவிட முடியாது. அறிஞன் அறிஞன் தான். நீ நீ தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையா யிருக்க மட்டுமே உழைத்திடு. ~ ஹோரஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறம் சார்ந்த மருத்துவர்களை உருவாக்குவதில் தோற்றுவிட்டோமா?

களவு, கொள்ளை, கொலை, அடாவடித் தனங்கள் என்ற மிக மோசமான சூழமைவுக் குள் நம் தமிழினம் பட்டலைகிறது.

இருந்தும் நம் மண்ணில் கற்றறிந்த அறிஞர் பெருமக்களும் கடவுளாக நின்று காத்தருளக்கூடிய எங்கள் மருத்துவர்களும் இருப்பதனால் எங்கள் மண்ணில் வாழ்வது சுகமானது என்ற நினைப்போடு இருக்கின்ற வர்கள் ஏராளம்.

இருந்தும் அண்மைக்காலமாக நம் மருத் துவ சேவை விமர்சனத்துக்குள்ளாகி இருப் பது கண்கூடு.

பொதுவில் விமர்சனம் தவிர்க்க முடியாத தென்பது ஏற்புடையதே.

ஆயினும் கடவுளாகப் பார்க்கப்படுகின்ற மருத்துவர்கள் குறித்து விமர்சனங்கள் எழுவது அந்த மக்கள் சமூகத்துக்கு ஆரோக்கியமான தல்ல.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதாவது மருந்த்துவர் களைப் பொதுமக்கள் விமர்சிப்பதென்பது ஒரு வகை.

மாறாக, மருத்துவர்கள் மருத்துவர்களை விமர்சிப்பதென்பது மிக மோசமான விடயம்.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்ணாலும் காண முடியாத நிபுணத்துவ மருத்துவர்கள் சிலர் தனியார் வைத்தியசாலை களில் தங்கியிருந்து வேலை செய்கிறார்கள்.

மருத்துவ சிகிச்சையின்போது குறித்த நோய் பற்றிய விபரங்களை நோயாளிக்கும் அவரது உறவினர்களுக்கும் தெரியப்படுத்து வதில் அசமந்தம் காட்டுகிறார்கள்.

நோய் பற்றி இவர்கள் தெரிந்து என்ன செய்யப் போகிறார்கள் என்ற மமதையுடன் நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் சில மருத்துவ நிபுணர்கள் மீது பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

அதேநேரம் கடவுளுக்குச் சமமான மருத் துவர்களும் உண்டு. அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் தங்களின் பணியைச் செம்மையாகச் செய்து, தனியார் வைத்திய சாலைகளிலும் பொருத்தமானவர்களுக்கு சிகிச்சை வழங்குகிறார்கள்.

தனியார் வைத்தியசாலைகளில் கடமை யாற்றாமல் இருப்பதற்கு எங்கள் நாட்டில் மருத்துவர்களுக்கு வழங்கப்படுகின்ற வேத னம் போதுமானதல்ல என்ற நியாயப்பாடு களை பொதுமக்கள் ஏற்றுக் கொள்கின்ற னர். அதுபற்றி உரையாடுகின்றனர்.

ஆனால் மருத்துவர்களை மருத்துவர்கள் விமர்சிப்பது, மருத்துவர்களை மருத்துவர் களே ஓரம்கட்டுவது, உரிய வளங்களை வழங் காமல் மல்லுக்கட்டுவது, திட்டம் போட்டு வைத் தியசாலையில் இருந்து ஓடவைப்பது என்பன உள்வீட்டு விவகாரமாக நடந்து வருகிறது.

ஆனால் இப்போது இந்த நிலைமைகள் எல்லை மீறி, சமூகவலைத்தளங்களில் மருத்து வர்களை மருத்துவர்கள் விமர்சிக்கின்ற அளவில் கீழிறங்கி இருப்பதுதான் வேதனைக் குரியது.

ஆம், ஒட்டுமொத்த மக்கள் சமூகத்துக்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டிய மருத்துவர்கள் இந்தளவு தூரம் கீழிறங்கி இருப்பதைக் காணும்போது, ஆவாக்குழு அவ்வளவு மோசமல்ல என்று நினைக்கு மளவுக்கு நிலைமை உருவாகியுள்ளது.

எதுஎவ்வாறாயினும் காத்திரமான மருத் துவர்களை உருவாக்கிய யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீடம் அறம் சார்ந்த மருத்து வர்களை உருவாக்குவதில் தோல்வி கண்டு விட்டதோ என்று நினைக்குமளவுக்கு நிலைமை வந்துற்றுள்ளது.

# நாட்டைப் பிரிப்பதற்கு சம்பந்தன் உடன்படவில்லை

## அஞ்சலியுரையில் ஜனாதிபதி புகழாரம்

நாட்டைப் பிரிப்பத ற்கு இரா.சம்பந்தன் ஒரு போதும் உடன்படவி ல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர சுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்த னின் இறுதி நிகழ்வு நேற்று திருகோணம லையில் இடம்பெற்றது.

இதில்கலந்து கெண்டு அஞ்சலி உரையாற் றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவி த்தார்.

அவர் மேலும் கூறு கையில்,

பிரிக்கப்படாத இலங் கையில் அதிகாரப் பகிர் வுக்கே சம்பந்தன் எப் போதும் செயலாற்றி னார். நாட்டைத் துண்டா டுவதற்கு அவர் ஒருபோ தும் உடன்பட வில்லை.

தமிழ் மக்களின் பிரச் சினைக்குத் தீர்வு காண அவர் அயராது உழைத் தவர். அவரின் பணியை நிறைவேற்ற நாம் அனை வரும் ஒன்றிணைய வேண்டும்.

13ஆவது திருத்தத் தில் பொலிஸ் அதிகார விடயத்தை ஒரு புறம் வைத்துவிட்டு ஒன்று பட்ட இலங்கைக்குள் சாத்தியமான தீர்வு ஒன்றை நடைமுறை ப்படுத்துவது குறித்துப் பேசுவோம்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற காலத்தி லேயே ஒன்றுபட்ட இலங் கைக்குள் ஒரு நியாய மான தீர்வை தமிழர்களு க்கு பெற்றுக் கொடுப்பது குறித்து சம்பந்தனோடும் ஏனைய தமிழ் தலைவர் களோடும் பேசி வந்தி ருக்கிறேன். அதற்கான முன் முயற்சிகளை ஆர ம்பித்தோம்.

ஆனால் நாடு வங் குறோத்து நிலையில் இருந்ததால் பொருளா தாரப் பிரச்சினைகளு க்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

அதனால் தீர்வு முயற் சிகள் தாமதமாகின. இப்போது நாங்கள் மீண் டும் அதனை ஆரம்பிக்க வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை ஒரு புறம் வைத்து விட்டு நாங்கள் தீர்வைப் பற்றி விரிவாக பேசலாம்.

காணி ஆணை குழு க்களை நியமிப்பதற் கான சட்டமூலம் தயா ராக இருக்கின்றது.. மாகாண சபைத் தேர்தல் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். ஆனாலும் புதிய முறையிலான தேர் தல், சிக்கல் நிறைந்தது என்று கருதப்படுவதால் பழைய முறையில் தேர் தலை நடத்தலாம் என யோசிக்கிறோம்.

ஆயினும் இளைஞர், யுவதிகளுக்கான பிரதிநி தித்துவம் அதிகரிக் கப்பட வேண்டும். அதே சமயம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்ப தவியை இழக்காமல் மாகாண சபைகளில் போட்டியிடுவதற்கான மாற்றங்களையும் நாம் கொண்டுவர நினைக்கி றோம்.

சம்பந்தன் தமிழர்க ளின் ஒரு சிறந்த தலை வர். அது மாத்திர மல்ல,அவர் இலங்கை மக்களின் தலைவரும் கூட. சிறந்த எதிர்க்கட் சித் தலைவராக செயல் பட்டார். 2018 முறையற்ற விதத்தில் என்னுடைய பிரதமர் பதவி சவாலு க்கு உட்படுத்தப்பட்ட போது சிறந்த எதிர்க் கட்சித் தலைவராக அவர் காரியமாற்றினார் எனக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யார் நீதிமன்றத்திற்கு ச்சென்றாலும் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படும்.

அதன் பின்னரே பாராளுமன்றத் தேர் தலும் மாகாணசபைத் தேர்தலும் நடாத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

(ந-7)

## பறிமுதல் செய்யப்பட்ட இந்தியப் படகுகள் ஏலத்தில்

(கொழும்பு)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீதி மன்றங்களினால் அரசுட மையாக்கப்பட்ட இந்தியப் படகுகளினை ஏலம்விட இலங்கை அரசு தீர்மானித் துள்ளது.

இவ்வாறு ஏலம் விடுவ தனால் கிடைக்கும் பணத் தினை அண்மையில் இந்திய மீனவர்களினை தடுத்து நிறுத்த முற்பட்ட வேளை உயிரிழந்த கடற் படை வீரர்களின் குடும்பத் தினருக்கு கையளிக்கப்பட வுள்ளது,

இதற்காக தற்போது இலங்கையில்அரசஉடமை யாக்கப்பட்ட இந்தியப் பட குகள் எந்த மாவட்டத்தில், எத்தனை படகுகள் உள் ளன என்ற விவரம் பெறப் பட்டு ஏலத்திற்கான பணி களை முன்னெடுக்குமாறு மாவட்ட கடற்றொழில் நீரி யல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர்களி ற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வாய் மொழியாக உத்தரவிட்டு ள்ளார்.

இந்த உத்தரவிற்க மைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 41 படகுக ளும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் தலா 5 படகுகளும், திருகோணமலை மாவ ட்டத்தில் இரு படகுகளும் உள்ளன எனக் கணக் கெடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிடிக் கப்பட்ட இந்தியப் படகுகள் அனைத்தும் 22 ஆம் ஆண்டு ஏலத்தில் விற்கப் பட்டமையும் குறிப்பிடத்த க்கது. (ந-7)

### மாணிக்க கங்கையில் நீராடுகையில்

## முதலையின் தாக்குதலுக்கு இலக்கானவர் மரணம்

(கதிர்காமம்)

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிய ஒரு வர் முதலையின் தாக்கு தலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

மாலை வேளையில் ஆலயம் செல்வதற்காக பலர் மாணிக்க கங்கை யில் நீராடிக்கொண்டிருந்த வேளையிலேயே எதிர் பாராத விதமாக குறித்த நபரை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

பொலிஸார் மீட்புப் படை யினர் குறித்த நபரைக் காப்பாற்ற முயற்சித்த போதும் அது பயனளிக்காமையி னால் அவர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார்.

சடலம் கதிர்காமம் வைத் தியசாலையில் வைக்க ப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## மாணிக்கவாசகர் குருபூசை நாளை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் மாணிக்க வாசகர் குருபூசை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணம் நீராவியடி யில் அமைந்துள்ள நாவ லர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன் தலைமை யில் இடம்பெறும் இந்நிகழ் வில் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதி அதிபர் சபாரட்ணம் யசோதன் பிரதம விருந்தினராகக் கல ந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்களின் விசேட ஆற்றுகைகளும் பரிசில் வழங்கல் நிகழ்வும் மகே ஸ்வரப் பூசையும் இடம் பெறும். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

12

இந்த இடைக்காலத்தின் போது, பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு பங்காளதேசத்தின் ஜனாதிபதிக்கு மாற்றப்படுகிறது. அவர் தளபதியின் பாத்திரத்தை ஏற்றுக்கொள்கிறார்.

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் (BNP யின்) 2001-2006 பதவிக் காலத்தின் முடிவில் காபந்து அரசாங்கத்தின் தலைமை ஆலோசகராக வரவிருந்த உடனடி முன்னாள் தலைமை நீதிபதியான மு. ஆ. ஹசனின் நடுநிலைமைபற்றி அவாமி லீக் கட்சி கேள்வி எழுப்பியது.

தலைமை ஆலோசகராக (CA ஆக) யார் நியமிக்கப்படுவார்கள் என்பது பற்றிய நிச்சயமற்ற நிலையில் அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர்கள் 2006, ஒக்டோபர் 28 முதல் லோகி பொய்தா இயக்கம் என்று பிரபலமாக அறியப்பட்ட போராட்டங்கள் மற்றும் வன்முறைகளை நடத்தினர். இதன் விளைவாக குறைந்தது 12 பேர் இறந்தனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்தனர்.

கலிதா ஜியா அரசிற்கு எதிராக நாட்டில் அரசியல் கலவரங்கள் தொடர்ந்த நிலையில் ஒக்டோபர் 2006 இல் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி ஆட்சியிலிருந்து விலகியது.

ஜனவரி 11, 2007இல், அவாமி லீக்கினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பநிலையைத் தொடர்ந்து, வங்காளதேச ராணுவ மற்றும் சிவில் கட்டமைப்புக்கள் ஒரு நடுநிலையான இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கு ஆதரவு வழங்கின. இடைக்கால அரசாங்கமே, அடுத்த தேர்தலை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டது.

நாடு பாரியளவிலான ஊழல், ஒழுங்கின்மை மற்றும் அரசியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டது. விலைவாசி உயர்ந்தது. நாட்டு மக்கள் கடும் பாதிப்படைந்தனர். இடைக்கால அரசாங்கம் அரசாங்கத்தின் எல்லா நிலைகளிலும் காணப்பட்ட ஊழலை வேரோடு அழிப்பதை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டது.

இதன்படி, பல குறிப் பிடத்தக்க அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் ஊழல் முறைகேட்டுக்காக கைதுசெய்யப்பட்டனர். முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் இரு மகன்கள் உட்பட 160 அரசியல் கட்சித் தலைவர்கள், தொழில் அதிபர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஊழல் வழக்கில் சிறைபிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு பல சர்ச்சைகளினால் 2008 வரை தேர்தல் நடைபெறாது தடைப்பட்டது. பின்னர் காபந்து அரசு எனும் தற்காலிக அரசு, 29 டிசம்பர் 2008 இல் பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடத்தியது. அவாமி லீக் கட்சி, பாராளுமன்ற தேர்தலில், மூன்றில் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்றி, சேக் ஹசினா தலைமையில் 6 ஜனவரி 2009 இல் புதிய அரசு பதவி ஏற்றது.

## 2008 பங்களாதேஷ் பொதுத் தேர்தல்

பங்களாதேசத்தில் 29 டிசம்பர் 2008 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. கலிதா ஜியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP) மற்றும் ஷேக் ஹசீனா தலைமையிலான பங்களாதேஷ் அவாமி லீக் கட்சி ஆகியவை தேர்தலில் இரண்டு முக்கிய கட்சிகளாகப் போட்டியிட்டன.

டிசம்பர் 11 அன்று, பங்களாதேஷ் அவாமி லீக் /ஹசைன் முஹம்மது எர்ஷாத் தலைமையிலான ஜாதியா கட்சியுடன் ஒரு கூட்டணியை உருவாக்கியது. இக்கூட்டணியில் வேறு சில சிறு கட்சிகளும் இடம்பெற்றிருந்தன. பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP), 2008 தேர்தலில் பங்கேற்க 2001 தேசியத் தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட ஜமாத்-இ-இஸ்லாமியுடன் அதன் கூட்டணியைத் தொடர்ந்தது.

தேர்தல் முதலில் ஜனவரி 2007 இல் திட்டமிடப்பட்டது. ஆனால் முன்னர் கூறியதுபோல் அது ஒரு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காபந்து அரசாங்கத்தால் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் அவாமி லீக் தலைமையிலான மகா கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அது 300 இடங்களில் 263 இடங்களை வென்றது.

முக்கிய போட்டி யான நான்கு கட்சி கூட்டணி 32 இடங்களை மட்டுமே பெற்றது. மீதமுள்ள நான்கு சுயேச்சை வேட் பாளர்களுக்கு சென்றது. அவாமி லீக் வேட்பாளர் ஒருவரின் மர்ம மரணம் காரணமாக நோகாலி-1 தொகுதியில் வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக ஜனவரி 12, 2009 அன்று தேர்தல் நடத்தப்பட்டது. அத் தொகுதியில் BNP வேட்பாளர் வெற்றி பெற்றார். பங்களாதேச பொதுத்தேர்தல் வரலாற்றில் அது வரை பதிவான வாக்குப் பதிவின் அதிகபட்ச வாக்குப்பதிவான 87% இத் தேர்தலில் பதிவாகியது.

போலி வாக்களிப்பைத் தவிர்க்க புகைப்படங்களுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகளை தேர்தல்கள் பயன்படுத்தியது இதுவே முதல் முறையாகும். இது டிஜிற்றல் வாக்காளர் பட்டியலை உருவாக்கும் ஐ.நாவின் நிதியுதவியின் முயற்சியாகும். தேர்தலுக்கு முன், வாக்காளர் பட்டியலில் இருந்து 11 மில்லியன் தவறான பெயர்கள் நீக்கப்பட்டன.

பங்களாதேஷ் இராணுவத்தின் சுமார் 50,000 வீரர்களும் 600, 000 பொலிஸாரும் தேர்தல் மோசடிகள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறையில் இருவர் கொல்லப்பட்டனர்.

200,000 தேர்தல் கண்காணிப்பாளர்கள், பங்களாதேஸுக்கு வெளியில் இருந்து 2,500 பேர் உட்பட தேர்தல்களைக் கண்காணித்து அவர்களின் சுதந்திரமான மற்றும் நியாயமான தன்மையை உறுதிப்படுத்தினர். தேர்தலுக்கு முன், இராணுவ ஆதரவுடன் கூடிய காபந்து அரசாங்கம், ஊழலை செயற்பாட்டில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

டாக்டர். ஃபக்ருதீன் அகமது தலைமை ஆலோசகராக இருந்த இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காபந்து அரசாங்கம், பங்களாதேசத்தின் பிரதமராக திருமதி ஷேக் ஹசீனாவுடன் 6 ஜனவரி 2009 அன்று உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தது.

## 2012 ஹதசாரி வன்முறை

2012 ஹதசாரி வன்முறை என்பது வங்காளதேசத்தின் சிட்டகாங் பிரிவில் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 மற்றும் 10 திகதிகளில் அன்று பெரும்பான்மை முஸ்லிம்களால் சிறுபான்மை இந்து சமூகத்திற்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களைக் குறிக்கிறது.

இந்து சமூகத்திற்கு எதிரான வன்முறைக்கு ஏராளமானோர் கண்டனம் தெரிவித்தனர். ஆரம்பத்தில் பங்களாதேஷ் பிரதான ஊடகங்கள் இந்த தலைப்பினை இருட்டடிப்பு செய்தன.

ஆனால் ஃபேஸ்புக் மற்றும் வலைப்பதிவு காரணமாக இந்த செய்தி உலகம் முழுவதும் பரவியது. இந்த குற்றத்திற்கு எதிராக ஏராளமான இஸ்லாமியர்களும் போராட்டம் நடத்தினர்.

## 2012 ஃபதேபூர் வன்முறை

2012 ஃபதேபூர் வன்முறை என்பது 31 மார்ச் 2012 அன்று தென்மேற்கு பங்களாதேஷில் உள்ள சத்கிரா மாவட்டத்தில் உள்ள கலிகஞ்ச் உபாசிலாவின் கீழ் உள்ள ஃபதேபூர் கிராமத்தில் சிறுபான்மை இந்து சமூகத்தின் மீதான தாக்குதலைக் குறிக்கிறது.

26 மார்ச் 2012 அன்று, சுதந்திர தினத்தன்று, ஃபதேபூர் உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் புகழ் பெற்ற வங்காளதேச அரசியல்வாதியும் இலக்கியவாதியுமான அபுல் மன்சூர் அகமதுவின் "ஹஸுர் கெப்லா" சிறுகதையைத் தழுவி ஒரு நாடகத்தை அரங்கேற்றினர். இக் கருத்துரை பல்கலைக்கழக பட்டப்படிப்புகளில் பெங்காலி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

இந் நாடகம் அரங்கேறி மூன்று நாட்களுக்குப் பிறகு, 29 மார்ச் 2012 அன்று, இஸ்லாமிய தீர்க்கதரிசி, முஹம்மதுவைப் பற்றி அவதூறான கருத்துக்கள் நாடகத்தில் கூறப்பட்டதாக ஜமாத்-இ-இஸ்லாமிக்கு ஆதரவான இரண்டு உள்ளூர் செய்தித்தாள்கள் தெரிவித்தன. இந்தச் செய்தி பொய்யானது என்று பின்னர் நிரூபிக்கப்பட்டாலும், செய்தி பரவியவுடன் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது.

மார்ச் 30 அன்று, சவுத் ஸ்ரீபூர் யூனியன் பரிஷத் உறுப்பினர் அபு ஜாபர் சன்புய், நாடகக் கலைஞர், தலைமை ஆசிரியர் மற்றும் உதவித் தலைமை ஆசிரியர் மீது குற்றம் சாட்டி காளிகஞ்ச் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்தார். தலைமை ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குப் பிறகு முஸ்லீம்கள் மற்றும் முல்லாக்கள் குழு பல மணி நேரம் சாலைகளை மறித்து சத்தமில்லாத ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

சனிக்கிழமையன்று, பக்கத்து பகுதிகளிலிருந்து மக்கள் ஃபதேபூர் கிராமத்தில் தௌஹிடி ஜனதாவின் பதாகையின் கீழ் திரண்டனர். கிருஷ்ணாநகர் மற்றும் பிஷ்ணுபூர் ஒன்றியங்கள் மற்றும் பிற பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் தெற்கு ஸ்ரீபூர் ஒன்றியத்தின் ஃபதேபூர் கிராமத்திற்கு வெளியே கூடியிருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பள அதிகரிப்...

வித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியுமானால் நிச்சயமாக நாம் அதைப் பெற்றுக் கொடுப்போம். மக்களின் வரிப் பணத்திலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பினை வழங்குவதன் ஊடாக மக்களின் வரிச்சுமை அதிகரித்துச் செல்கின்றது.

நாட்டின் வரிப்பணம் முழுவதனையும் சம்பளம் வழங்குவதற்காகச் செலவிட முடியாது.

ஏனெனில் வரிப்பணம் முழுவதனையும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு செலவிடுவதன் மூலம் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது.

எனவே தற்போதைய நிலையில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளானது அரசியல் பழிவாங்கல் செயற்பாடாகும் என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## முல்லைத்தீவில்...

கேணிப் பகுதியிலுள்ள கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள அம்மன் விக்கிரகத்தின் ஒரு கண் திடீரென திறந்த அதிசயம் நேற்று நடந்துள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் அமைந்துள்ள கற்பக பிள்ளையார் ஆலயத்திலுள்ள அம்மன் சிலையானது வழமையாக மூடிய நிலையிலுள்ள கண்களையுடையதாகக் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை திடீரென சிலையிலுள்ள ஒரு கண் திறந்த நிலையிலும் மற்றைய கண் மூடிய நிலையிலும் மாறி மனித கண்களை ஒத்த நிலையில் காட்சியளித்தது.

இதனையடுத்து பிரதேசவாசிகள் ஆச்சரியத்துடனும், பக்தி பரவசத்துடனும் வணங்கி வருகின்றனர். (ந-7,299)

## சம்பந்தனின்...

வர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற இரா.சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இனமொன்றின் விடுதலைக்கான பயணத்தில் பணியாற்றிய தலைவர் ஒருவர் மறைந்த துக்கமான தருணத்தில் இணைந்திருக்கின்றோம்.

சம்பந்தன் அவர்கள் அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் இலக்கணமாக இருந்ததோடு அரசியல் கொள்கையில் நெஞ்சுரத்துடன் நேர்மையாக இருந்துள்ளார்.

அவரொரு சட்டத்தரணியாக இருந்தபோதிலும் 1956இல் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்தார்.

அவர், தான் எடுத்த பணியை அடுத்த கட்ட பிரதிநிதிகளும் தொடர்ந்து முன்னெடுத்து நிறைவுக்கு கொண்டுவர வேண்டும் என்று விட்டுச் சென்றுள்ளார்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி கொழும்பில் சம்பந்தனை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகச் சந்தித்தபோது எடுத்த புகைப்படத்தினை அவர் மீண்டும் பகிர்ந்து நினைவுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

விசேடமாக தமிழர்களுக்கு நேர்மையானதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை நினைவுகூர்ந்துள்ள பிரதமர் மோடி அதனை வெளிப்படுத்தியுள்ளார்.

நான் இங்கு நின்றுகொண்டிருப்பதற்கான காரணம், தமிழக மக்களும் பாரதிய ஜனதா கட்சியும் எந்தளவு தூரம் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றோம் என்பதன் வெளிப்பாடாகும். அதேநேரம், சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காக வாழ்ந்து மறைந்திருக்கின்றார்.

அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள். அத்துடன் சம்பந்தன் விட்டுச் சென்ற பணியை முன்னெடுப்பதற்காக அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று நான் கேட்டுகொள்கின்றேன்" என்றார். (ந-7)

## தெல்லிப்பழை...

கிணைப்பாளருமான கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பிய கடிதத்தில்,

தெல்லிப்பழை மகளிர் இல்லத்துக்கு எதிராக ஒரு சில அரச அதிகாரிகளும் மற்றும் சிலரும் சேர்ந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

திட்டமிட்டு ஒரு சிலரால் மேற்கொள்ளப்படுகின்ற இச்சம்பவம் சைவ சமயத்துக்கு எதிரான செயற்பாடு எனக் கருதப்படுகிறது.

எனவே இது விடயத்தில் நீதியான ஒரு விசாரணையை நடத்த தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ந-7)

## வைத்...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா, கடந்த சில நாட்களாக தனது முகநூலில் வைத்தியசாலையின் குறைபாடுகளை பதிவேற்றம் செய்திருந்தார்.

இவ்விவகாரம் வடக்கு மாகாண சுகாதார திணைக்கள மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் நேற்றிரவு அவருக்கான இடமாற்றக் கடிதத்துடன் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் டி பத்திரன பொலிஸ் பாதுகாப்புடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்றார்.

எனினும் இது அலுவலக நேரம் அல்ல என்றும் கடிதம் தனிச்சிங்களத்தில் இருப்பதாலும் அதனை ஏற்க முடியாதென வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்தார்.

இதையடுத்து மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் அர்ச்சுனா [illegible] [illegible]னி யில் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் வைத்தியர் அர்ச்சுனாவை விசாரணைக்கு வருமாறு அழைத்தனர்.

எனினும் பதில் வைத்தியர் இல்லாமல் தன்னால் பொலிஸ் நிலையத்துக்கு வரமுடியாதென அவர் மறுத்தார்.

இதனையடுத்து மாகாணப் பணிப்பாளர் பதில் வைத்தியர் ஒருவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க, குறித்த நிலைமை சாவகச்சேரி பகுதி எங்கும் பரவ, இரவோடு இரவாக நூற்றுக்கணக்கான பொது மக்கள் கூடி அர்ச்சுனாவை பொலிஸார் அழைத்துச் செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதி எங்கும் பரபரப்பான சூழல் நிலவியது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை சாவகச்சேரி வைத்தியசாலையில் பொலிஸார் குவிக்கப்பட்டிருப்பதுடன் பொதுமக்களும் திரண்டுள்ளனர். (ந-7,30)


மஹஜன சம்பத
திகதி 2024.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 5527
B 2 4 4 5 8 3
அத சம்பத
B 4 5 8 3
சீட்டிழுப்பு இலக்கம் 102
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1557
A 02 54 56 67 A
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance இலக்கம் 25090

மெகா பவர்
திகதி 07/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1875
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
H 08 06 27 39 79
Double Chance 18506
www.nlb.lk

லக்கி 7 VIP
திகதி 2024.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 353
F 7 1 1 4 4 1 F
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3769
சீட்டிழுப்பு திகதி 07.07.2024
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 09 38 51 74
விசேட வெற்றி எழுத்து Y
76357
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 0836
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 09 15 49 54 ரிஷபம்
தன யோக இலக்கம் 31525 தேசிய லொத்தர் சபை 14

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.07.2024 வெற்றி வாரம் 235 வர்ணம் பழுப்பு
ஆங்கில எழுத்து K
மற்றும் வெற்றி இலக்கம் 7 9 5 8 2 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,133,320.00
62060
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2501 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 07.07.2024 தினம் ஞாயிற
வெற்றி இலக்கங்கள் 05 21 28 29 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 97,476,140.80
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 2024.07.07 வெற்றி வாரம் 4662 வர்ணம் இளஞ்சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 38 41 61 71 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,384,824.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 13169
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 499
சீட்டிழுப்பு திகதி 2024.07.07
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 26 | 30 | 48
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,287,760/-
அபிவிருத்தி லொத்தர் சபை DLB www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4213 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.07.07 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 13 40 48 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,585,301.20
459848
அபிவிருத்தி லொத்தர் சபை DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 02 49 51 54 74
சுப்பர் இலக்கம்
1677 மஞ்சள் 07.07.2024 ஞாயிற
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 531,798,781.00
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2327
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2024.07.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.125,958,541.60
வெற்றி இலக்கங்கள் 06 35 45 62 G
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 876720
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

Reliance Distributors என்னும் நிறுவனத்திற்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்பியவர்கள் No - 37, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை என்னும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வையுங்கள். (1412)

## வேலையாட்கள் தேவை

Ram medical என்னும் நிறுவனத்திற்கு Clark வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. விரும்பியவர்கள் 154E, நாவலர் வீதி, யாழ்ப்பாணம என்னும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பிவையுங்கள். (1412)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (143)

076 825 7716 (ஆகாஸ்)

JV Language Centre
Station Road, Chunnakam
Deutsch A1, A2 and B1
திருமணம் முடிந்து ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புபவர்களுக்கான வகுப்புக்கள்,
சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
Work Visa, Student Visa மூலமாக செல்ல விரும்புபவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன
தொடர்பு கொள்ள: 0777 291 307 or 0773 743 404 (1414)


## மோ.சைக்கிள்...

மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளரும் மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் உதவி இயக்குனருமான அருட்தந்தை கே.ஜொனார்த்தனன் அடிகளார் (வயது 31) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை தலைமன்னார் ஆலயத்தில் மாலை நேர திருப்பலியை ஒப்புக்கொடுத்துவிட்டு மீண்டும் தலை மன்னாரில் இருந்து மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது மாலை 6.50 மணியளவில் கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்திற்கு உள்ளாகியது. இதன்போது படுகாயமடைந்த குறித்த அருட்தந்தை மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சடலம் தற்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-7)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்



எமது கிராமத்தில், வைத்தியத்துறையில் சிறந்த சேவையாற்றிய Dr. பாலா என்று எல்லோராலும் அழைக்கப்படும் வைத்தியர் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இணுவையூர் முருகஜீவ
அறக்கட்டளை
யாழ்ப்பாணம் இலங்கை
(C-754)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-755)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-755)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(135)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
• Air Ticket Date Change • Travel Insurance
• Online Visa Appoinments • Travel Itinerary
• Sri Lanka Visa Extension
• All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-755)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 06 - 1941 | 07 - 07 - 2024 |

### கந்தையா பாலசுப்பிரமணியம் (Dr. பாலா)

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியர் கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று 07.07.2024 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - ஆச்சியம்மா தம்பதிகளின் மருமகனும் லில்லிமலர்(பவளம்) அவர்களின் பாசமிகு கணவரும் Dr.தினகரன்(பொறுப்பு வைத்திய அதிகாரி - பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி), லோகானந், கிருஷாந்தி, மாதுரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிகரன், லம்போதரன், அம்பாலிகா, பாமிலா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபாலன்(ஓய்வு பெற்ற அதிபர்), அருணகிரிநாதன் மற்றும் அருட்சோதி(கனடா) ஆகியோரின் சகோதரனும் ஜானுஜன், திவ்ஜா, நாகபூஷணி, விஷ்றுதா ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் நாளை (09.07.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு, இணுவில் (1418)

தகவல்:
குடும்பத்தினர்

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
## ஏல விற்பனை அறிவித்தல்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் பின்வரும் பொருட்கள் பின்வரும் திகதிகளில் ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்ய இருக்கிறது.

1. நவாலி வடிசாலையில் பின்வரும் பொருட்கள் 13.07.2024 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

| | |
|---|---|
| மினிரக்டர் பெட்டி | கியர்பொக்ஸ் - லான்மாஸ்ரர் |
| குவோட்டா லான்மாஸ்ரர் | வெள்ளிரும்பு கொள்கலன் |
| G.M. 12 இஞ்சின் | வெள்ளிரும்பு பைப் |
| பழைய இரும்புகள் | ஓடுகள் (பழையது) |
| வில்வர் வண்டிகள் | பழைய தகரங்களும், தகர மேசையும் |
| இரும்பு பெட்டிகளும் சோடா பெட்டிகளும் | |

2. பிப்பினிச்சந்தி மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பின்வரும் பொருட்கள் 20.07.2024 ஆம் திகதி 9.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

| | |
|---|---|
| கல்வனேஸ் | Box Bar |
| அலுமினியவார் | இரும்பு கம்பிகள் |
| S-Lon பைப் வகைகள் | Socket |
| L Bow | Bent |
| Electric Rods | Celling fan |
| Paint வகைகள் | ஒட்டு பலகைகள் |
| பிளாஸ்ரிக் பலகைகள் | |

ஏலவிற்பனை செய்யப்படுகின்ற பொருட்களிற்கான பணத்தினை உடன் செலுத்தி பொருட்கள் அலுவலக வளாகத்தில் இருந்து கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
பிப்பிலிச்சந்தி,
மானிப்பாய்.
(C-746)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org